**செய்தி வெளியீடு எண்: 313** **நாள்: 09.05.2018**

## செய்தி வெளியீடு

சென்னை அரசு கவின் கலைக்கல்லூரியில் 09.05.2018 புதன்கிழமை காலை 11.00 மணியளவில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற மாணவ, மாணவிகளின் ஓவிய–சிற்ப கலைக்காட்சியினை **தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு க.பாண்டியராஜன், அவர்கள்** திறந்து வைத்து ஊக்கத் தொகை மற்றும் சான்றிதழ் வழங்கி உரையாற்றினார்கள். இவ்விழாவில் **கலை பண்பாட்டுத் துறை ஆணையர் திரு அ. இராமலிங்கம், இ.ஆ.ப, கலை பண்பாட்டுத் துறை இணை இயக்குநர், திரு. எம்.பெருமாள்,** மற்றும் **சென்னை அரசு கவின் கலைக்கல்லூரியின் முதல்வர் (பொ) திரு கி.பா.விஜயகுமார்** ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

மேலும், இவ்விழாவில் மாண்புமிகு துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு ரூ 1.00 இலட்சம் மதிப்பிலான ஊக்கத் தொகைகள், பாராட்டுச் சான்றிதழ்கள் மாணவர்களுக்கு வழங்கி, தங்களது திறமைகளை மேம்படுத்துவதற்கு ஊக்கமளித்தும், மாணவர்களுக்கு பயிற்சிப் பொருட்கள் தடையின்றி கிடைத்திட வரும் கல்வியாண்டு முதல் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் தெரிவித்தார்கள். காட்சியில் வைக்கப்பட்ட படைப்புகளை பார்வையிட்ட அமைச்சர் அவர்கள், ஒவ்வொரு படைப்புகளையும் பாராட்டி, வாழ்க்கையில் மேம்பட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**